வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
**ந.க.எண். 1878/ஆ1/2025 நாள் : .04.2025**

---

பொருள் : தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – 01.01.2025 உள்ளவாறு அரசு /நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1)/ அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் – தேர்ந்தோர் பட்டியல் – தயார் செய்யக் கருத்துருக்கள் கோருதல் தொடர்பாக.

பார்வை : சென்னை 600 006, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.014360/ டபிள்யு1/இ1/2025, நாள்.23.04.2025.

-----

01.01.2025 நிலவரப்படியான அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு கீழ்க்காண் விவரங்கள் கோரப்படுகிறது.

**முதுகலை ஆசிரியர்கள் சார்பான விவரங்கள்**

1. 2005–2006 ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட்டு 1.06.2006 முதல் பணிவரன் முறை செய்யப்பட்ட முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) ஆகியோரின் தெரிவுப் பட்டியல் மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்தவர்களை மதிப்பெண் அடிப்படையில் சரிபார்த்து முன்னுரிமைப்படி அனுப்ப வேண்டும். (உச்சநீதிமன்ற தீர்ப்பாணையின்படி போட்டித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தர எண் நிர்ணயித்து முதுகலை ஆசிரியர்கள் அனைவருக்கும் 2005–2006 ஆம் ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை பின்பற்றிடல் வேண்டும்.)
2. கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் விவரம்.
3. முந்தைய ஆண்டுகளில் தயார் செய்யப்பட்ட தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெறாமல், 01.01.2025 அன்றைய நிலவரப்படி தயார் செய்யப்படும் தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்கள்.
4. ஏற்கனவே, 01.01.2021 நிலவரப்படியான அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் (3 Panal Years) நிறைவு செய்துள்ள முதுகலை ஆசிரியர்கள்.

**<u>அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சார்பான விவரங்கள்</u>**

1. 2015–2016 ஆம் ஆண்டு/அதற்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு பெற்றவர்களை தவிர மீதமுள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விவரங்கள்.

2. ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, 1.1.2021 நிலவரப்படி தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று ஆண்டு தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் (3 panal yours) நிறைவு பெற்றுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் விவரங்கள்.

01.01.2016 க்குப் பிறகு முதுகலை ஆசிரியர்களை அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு/பணி மாறுதலுக்கு முன்னுரிமைப்பட்டியலில் சேர்க்கக் கூடாது என்றும், பட்டதாரி ஆசிரியர்கள் (Feeder Category) மட்டுமே சேர்க்கப்பட வேண்டும் என்றும் பிறப்பிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் W.A.(MD) No.1468/2017, etc., batch cases தீர்ப்பாணை நாள்.23.03.2023 இன் மீது உச்சநீதிமன்றத்தில் CMP தாக்கல் செய்யப்பட்டு SLP Diary No.47685/2023 இல் நிலுவையில் உள்ளதால், தீர்ப்பாணை பெறப்பட்ட பின்னரே இப்பொருள் சார்ந்து முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

01.01.2023, 01.01.2024 நிலவரப்படியான முன்னுரிமைப் பட்டியல்களின்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலையாசிரியர்களுக்கு 2:7 ratio அடிப்படையில் பணியிடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தீர்ப்பு பெற்ற பிறகே 01.01.2016க்குப் பிறகு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களை அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் முன்னுரிமைப்பட்டியல் தயாரிக்க இயலும் என்பதால் இது குறித்த விபரங்கள் தனியே பின்னர் கோரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு அரசாணை நிலை எண். 14 பள்ளிக்கல்வி (பக2(1)) நாள்.30.01.2020 இல் Annexure. reffered to in rule 7(a) இல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

1. Tamil Nadu Government Office Manual Test
2. Account test for Executive Officers (Or) Account test for Subordinate officers part I
3. Tamil Nadu School Education Department Administrative test Paper–1
4. Tamil Nadu School Education Department Administrative test Paper–I

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுக்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (b)இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்க கூடாது.

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்று தண்டனை காலம் முடிவடையாத முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்க கூடாது.

அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விரும்பும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் கருத்துருக்களை மட்டும் மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலை) பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும். அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பமுடையவர்கள் சார்பான கருத்துருக்களை தலைமையாசிரியர்களின் விருப்பக் கடிதத்தினை மட்டும் அனுப்பினால் போதுமானது.

மேலும், அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களைப் பொறுத்தமட்டில் அரசாணையின்படி மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு பதவி உயர்வில் செல்ல அளிக்கப்படும் விருப்பக் கடிதமே இறுதியானது அதனை மீண்டும் ஒரு முறை மாற்றி அமைத்திட இயலாது.

மேற்கண்ட விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு தகுதியுடைய முதுகலை ஆசிரியர்களின் விவரங்களை பூர்த்தி செய்து கருத்துருக்கள் உரிய இணைப்புகளுடன் மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முதன்மைக் கல்வி அலுவலக ஆ1 பிரிவில் (2 நகல்களில்) 30.04.205 –க்குள் நேரில் ஒப்படைக்குமாறும், மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சார்பான கருத்துருக்களைப் பெற்று, தொகுத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்கள் முதன்மைக் கல்வி அலுவலக ஆ1 பிரிவில் 30.04.205 –க்குள் (2 நகல்களில்) நேரில் ஒப்படைக்குமாறும், தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. முதுகலை ஆசிரியரின் விவரங்கள் சார்ந்த படிவம்.
2. Access Sheet.
3. 2005 – 2006 இல் தெரிவுப் பட்டியல் போட்டி தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெறப்பட்டது.

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்– 9.

பெறுநர் :

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்.
2. அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு.

நகல்

கோப்பிற்கு.

(பா.க)